IN THE COURT OF THE PRINCIPAL SESSIONS JUDGE, PUDUKKOTTAI
( CHAPTER XXIII CODE OF THE CRIMINAL PROCEDURE)
S.C.No. 134 /2024
Dated:02.02.2026
Deposition of witness for :P.W.1

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு. சேக் அப்துல்லா | வயது | : | 44/2026 |
| தகப்பனார் பெயர் | : | முகமது இலியாஷ் | தாலுகா | : | புதுக்கோட்டை |
| கிராமம் | : | போஸ்நகர், புதுக்கோட்டை | தொழில் | : | கேபிள் டிவி தொழில் |

Solemnly affirmed by Thiru. Srinivasan, Grade -I Bench Clerk of this Court in accordance with the provisions of Act X of 1873

**Accused Absent. Petition u/s.355 BNS filed and allowed. Counsel present.**

**As per the Circular of the Hon'ble High Court, Madras in ROC.No.74663/2024/F1-Dt.21.02.2025 the identity of the witness verified with their identity card.**
**Aathar card of the Witness verified.**

**சாட்சியானவர் நீதிமன்ற அழைப்பாணையின் பேரில் வருகை புரிந்து அவருக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு முதல் விசாரணை:-**

**1) நான்** தற்போது புதுக்கோட்டையில் வசித்து கேபிள் டிவி தொழில் செய்து வருகிறேன். இந்த வழக்குப்பற்றி எனக்கு எதுவும் தெரியாது.

2) எதிரியை எனக்கு தெரியாது. நான் கையொப்பமிட்ட பேப்பரில் என்னுடன் நாகராஜனும் கையெழுத்திட்டார். நாகராஜனை எனக்கு தெரியும்.

3) என்னிடம் காட்டப்படும் அத்தாட்சியில் உள்ள முதல் கையெழுத்து என்னுடையதுதான். அது அ.சா.ஆ.1 ஆகும். அதை காவல் நிலையத்தில் வைத்து போட்டுகொடுத்தேன். நான் கையெழுத்து போட்ட பேப்பரில் என்ன எழுதியிருந்தது என்று எனக்கு தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

(சாட்சியானவர் அரசு வழக்கை ஆதரிக்காமல் சாட்சியம் அளித்ததால் சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய பிரிவு 157 **Bharatiya Sakshya Adhiniyam'2023** சட்டத்தின் படி அரசு வழக்கறிஞர் வேண்டுகோள் விடுத்தார். அதனால் நீதியின் பொருட்டு சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய அரசு வழக்கறிஞருக்கு அனுமதி வழங்கப்பட்டது)

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

1) 17.05.2024ம் தேதி 13.15 மணியளவில் புதுக்கோட்டை - ஆலங்குடி சாலையில் மேட்டுப்பட்டி கேட்டு அருகே எதிரி பொதுமக்களுக்கு அச்சம் ஏற்படுத்தும் வகையில் கையில் மனித உயிருக்கு ஆபத்தை ஏற்படுத்தக்ககூடிய பயங்கர ஆயுதமான இரும்பு வாளை

மு.மா.அ.நீ,

வைத்துக்கொண்டு, அவ்வழியே சென்ற பொதுமக்களை மிரட்டி போக்குவரத்திற்கு இடையூறாக எதிரி இருந்ததாகவும், அங்கு வந்த போலீசார் எதிரியை கைது செய்து விசாரித்தபோது, எதிரி தாமாக முன்வந்து ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்ததாகவுவம், எதிரி வைத்திருந்த இரும்பு வாளை போலீசார் கைப்பற்றியதாகவும், அப்பொழுது அங்கிருந்த நானும், நாகராஜனும் ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் அத்தாட்சியில் கையொப்பம் செய்துவிட்டு, தற்பொழுது எதிரிக்கு பயந்து உண்மைக்கு மாறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை - இல்லை**

திறந்த நீதிமன்றத்தில் எதிரி மற்றும் அவரது வழக்குநர் முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம் என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் வடிவாக்கப்பட்டு சாட்சியிடம் படித்துக் காட்டப்பட்டு விளக்கிக் கூறப்பட்டு சாட்சியால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.

முதன்மை மாவட்ட அமர்வு நீதிபதி,
புதுக்கோட்டை.

IN THE COURT OF THE PRINCIPAL SESSIONS JUDGE, PUDUKKOTTAI
( CHAPTER XXIII CODE OF THE CRIMINAL PROCEDURE)
S.C.No. 134 /2024
Dated:02.02.2026
Deposition of witness for :P.W.2

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு. அன்பு | வயது | : | 41/2026 |
| தகப்பனார் பெயர் | : | ரெங்கசாமி | தாலுகா | : | புதுக்கோட்டை |
| கிராமம் | : | மேட்டுப்பட்டி | தொழில் | : | அயனிங் கடை நடத்துகிறேன் |

Solemnly affirmed by Thiru. Srinivasan, Grade -I Bench Clerk of this Court in accordance with the provisions of Act X of 1873

**Accused Absent. Petition u/s.355 BNS filed and allowed. Counsel present.**

**As per the Circular of the Hon'ble High Court, Madras in ROC.No.74663/2024/F1-Dt.21.02.2025 the identity of the witness verified with their identity card.**

**Aathar card of the Witness verified.**

**சாட்சியானவர் நீதிமன்ற அழைப்பாணையின் பேரில் வருகை புரிந்து அவருக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு முதல் விசாரணை:-**

**1) நான்** தற்போது புதுக்கோட்டை மேட்டுப்பட்டியில் வசித்து அயனிங் கடை வைத்து நடத்தி வருகிறேன். இந்த வழக்குப்பற்றி எனக்கு எதுவும் தெரியாது.

2) எதிரியை எனக்கு தெரியாது. நான் கையொப்பமிட்ட பேப்பரில் என்னுடன் மாரிமுத்துவும் கையெழுத்திட்டார். மாரிமுத்துவை எனக்கு தெரியும்.

3) என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள இரண்டாவது கையெழுத்து என்னுடையதுதான். அது அ.சா.ஆ.2 ஆகும். அதை காவல் நிலையத்தில் வைத்து போட்டுகொடுத்தேன். நான் கையெழுத்து போட்ட பேப்பரில் என்ன எழுதியிருந்தது என்று எனக்கு தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

(சாட்சியானவர் அரசு வழக்கை ஆதரிக்காமல் சாட்சியம் அளித்ததால் சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய பிரிவு 157 **Bharatiya Sakshya Adhiniyam'2023** சட்டத்தின் படி அரசு வழக்கறிஞர் வேண்டுகோள் விடுத்தார். அதனால் நீதியின் பொருட்டு சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய அரசு வழக்கறிஞருக்கு அனுமதி வழங்கப்பட்டது)

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

1) கடந்த 17.05.2024ம் தேதி மாலை நானும், மேட்டுப்பட்டியை சேர்ந்த மாரிமுத்து என்பவரும், மேட்டுப்பட்டி அருகே நின்று கொண்டிருந்தபோது, அங்கு வந்த கணேஷ்நகர்

மு.மா.அ.நீ,

காவல் நிலைய உதவி ஆய்வாளர், அன்று மதியம் செல்வகுமார் என்பவர் கையில் கொடிய இரும்பு ஆயுதத்தை வைத்துக்கொண்டு, பொதுமக்களை அச்சுறுத்தியும், போக்குவரத்திற்கு இடையூறும் ஏற்படுத்திக்கொண்டிருந்ததாகவும், செல்வகுமாரை கைது செய்து வழக்கு பதிவு செய்திருப்பதாகவும், சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் வரைபடம் தயார் செய்வதற்கு சாட்சிகளாக இருக்க எங்களை கேட்டுக்கொண்டார் என்றும், அதை ஒப்புக்கொண்டு நானும், மாரிமுத்துவும் உதவி ஆய்வாளர் தயார் செய்த பார்வை மகஜரில் கையெழுத்து செய்தோம் என்று போலீசார் விசாரணையில் தெரிவித்துவிட்டு, தற்போது எதிரிக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை - இல்லை**

திறந்த நீதிமன்றத்தில் எதிரி மற்றும் அவரது வழக்குநர் முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம் என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் வடிவாக்கப்பட்டு சாட்சியிடம் படித்துக் காட்டப்பட்டு விளக்கிக் கூறப்பட்டு சாட்சியால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.

முதன்மை மாவட்ட அமர்வு நீதிபதி,
புதுக்கோட்டை.